# உலக தமிழோசை
ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

11வது ஆண்டில்

விளம்பரம்
VLAMBARAM™

☎ 416-282-8059
416-282-4978

[illegible]தி 11 SEPTEMBER 15, 2001 பாலம் 18



- பாடு என்பது கடமையாகுமா? (பக். 11)
- 'Film Festival' ஒரு நோக்கு (பக். 08)
- உண்மையை உலகம் உணர்ந்த நாள் எது? (பக். 15)
- இரசாயன ஆயுதமா, உயிராயுதமா பலமானது (பக். 2)
- பெண்களிற்கு ஏற்படும் இடுப்பு வலிக்கு (பக். 04)
- 7 புள்ளிகளை இழக்காமல் இருப்பதற்கு (பக். 13)
- தனியாக வீடு வாங்குபவர்களின் அனுபவங்கள் (பக். 19)
- தாய்ப்பாலா புட்டிப்பாலா சிறந்தது? (பக். 05)
- தஞ்சைக் கோவிலின் கோபுரத்தில் இருக்கும் கல் எப்படிச் சென்றது (பக். 12)






RE/MAX
Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க
பூரண ஆலோசனை
பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB



இழந்த தலைமுடியை மீண்டும் பெற
வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA
& Gift

☎: (416) 264-8787
2602 Eglinton Ave.E.
Toronto, Ont.,M1K 2R9

☎: (416) 269-8151
www.sabona.ca
www.tamilclub.com/sabona


*அமைதியான ஆலோசனை ஓர் உண்மையுள்ள மனைவி; ஆத்திரப்படுவோர்களின் ஆலோசனை ஒரு விலை மகள்.*

*போர்னியோ பழமொழி*

## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- செடி கொடிகள் காற்றுக்கு அசைகின்றன. கற்பாறை அசையாது புகழ்ச்சி இகழ்ச்சி என்ற காற்றுக்கு அசையாத கற்பாறை போன்ற மனது படைத்திரு
- அன்புக்கு எல்லையில்லை. கைம்மாறு கருதாது அன்பு செலுத்து. கைம்மாறு கருதினால் கடல் போன்ற அன்பு துளி போன்றதாகி வற்றிப்போம்.
- வெந்தழலுக்கு அருகிலிருந்தாலேயே வெண்ணெய் உருகுகிறது. தகாத சூழ்நிலையில் இருந்தால் நம்மை அறியாது மனது கீழ்நிலைக்குப் போய் விடுகிறது.
- ஓர் அற்ப ஜந்துவிடத்திலும் குற்றம் காணாதே.பக்தி வேண்டும் என்று பகவானிடம் பிரார்த்திப்பது போன்று பிறரிடம் குற்றம் காணாத மனப்பான்மை வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணு.

## உன்னை அறிந்தால்

புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு நாட்களும் நல்ல நாளாகப் பிறக்க வேண்டும் என்றே மனம் இறைவனை வேண்டுகின்றது. அண்மையில் படித்த ஒரு நூலில், வாழ்வில் வெற்றி பெறுபவாகள உறககததிறகுப போகமுன்பு இறைவனை நினைத்து, "நாளைய பொழுது எனக்கும் எல்லோருக்கும் நல்லதாகப் புலர வேண்டும்" எனப் பிரார்த்தித்துவிட்டே நித்திரைக்குச் செல்வதாகக் குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால் செப்ரெம்பர் 10, 2001 ஆம் திகதி உறங்கச் சென்றவர்களும் அவ்வாறே தியானித்து விட்டுத்தான் உறங்கியிருக்கக் கூடும். ஆனால் செப்ரெம்பர் 11, 2001ஆம் நாள் நடந்தது சகலரும் அறிந்ததே.

ஒருவர் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்யத் தயாராகும் போது எவ்வளவு பெரியவராக யார் இருந்தாலும் அவரை இலகுவாக வெற்றி கொள்ளலாம் என்றல்ல. ஒன்றுமறியாத அப்பாவிப் பல உயிர்கள் காரணமறியாமல் அழிந்து விட்டன. பெரியளவில் அழிவைக் கண்டவர்கள் பதறுகிறார்கள், பதட்டப்படுகிறார்கள். நியாயமான விடயம்.

'எய்தவன் இருக்க அம்பை நோவதில் என்ன பலன்'

இந்த அனர்த்தத்தின் ஆணிவேரைக் கண்டு அறிந்து அதற்கேற்ற தீர்வைக் காண்பதே நீண்டகால அமைதிக்கு வழி சமைக்கும்.

*நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!*

*-நெற்றிக்கண்ணன்*


Singapore Communication

FREE PAGER
-One Year Service $99.00
-Activation $25.00
-Free Panasonic Pager
More Info Call:
416-745-2378 (Sathi)
416-490-7703 (Praba)
416-589-4636 (Hot Line)

$35.00
100 Min Free
Mon-Fri 6pm-8am Free
Fri: 6pm - Mon 8am Free
400 First Incoming Min Free
C/W, C/F, Call ID Free
FREE GIFT AVAILABLE in store
HOT LINE: 416-980-4525





சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச்
சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை ஆகிய
இடங்களுக்கும் கடுகதியில்
பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life
LIBERTY MUTUAL

416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com



# அறிவும் ஆக்கமும் (88)

-விஜே குலத்துங்கம்

இலங்கை அரசாங்கம் இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதையடுத்து மக்களிடையே இந்த இரசாயன ஆயுதங்கள் என்றால் என்ன, இவை எவ்வகையான தாக்கங்களை சேதங்களை ஏற்படுத்தும் என்ற கேள்விகளெல்லாம் எழுந்துள்ளன. வழமையான துப்பாக்கிகளோ, தாங்கிகளோ பெருமளவில் உயிர்ச் சேதங்களை விளைவிக்காது. குறிபார்த்து சுடும் பொழுது அந்த இலக்கில் உள்ளவர்களுக்குத் தான் அழிவு உண்டாகும். பெருமளவில் உயிர்ச் சேதங்களையும், பொருட்சேதங்களையும் விளைவிக்கும் ஆயுதங்கள் Weapons of mass destruction எனப்படும். இவற்றை உபயோகிக்கும் போது இலக்கில் உள்ளவர்கள் மாத்திரம் அல்லாது சுற்றி வரவும் பலத்த உயிர் இழப்புகளை உண்டாக்கும். இவற்றை பொதுவாக நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. அணு ஆயுதங்கள் - Nuclear weapons
2. உயிரியல் ஆயுதங்கள் - Biological weapons
3. இரசாயன ஆயுதங்கள் - Chemical weapons
4. கதிர்வீச்சு ஆயுதங்கள் - Radiological weapons

இரசாயன ஆயுதங்களைப் பற்றிப் பார்க்க முன்பு, மற்றைய மூன்று வகையான பெருமளவு அழிவை உண்டாக்கும் ஆயுதங்களையும் பற்றிப் பார்க்க வேண்டும். ஏனெனில் சிலர் மற்றைய வகையான ஆயுதங்களையும், இரசாயன ஆயுதங்கள் என்று எண்ணிக் குழப்பமடைகின்றார்கள்.

அணு ஆயுதங்கள் எனப்படுவது அணுக்களின் சேர்க்கையினால் அல்லது அணுக்களின் பிரிகையினால் உருவாக்கப்படுகின்றது. இதன் போது வெளிப்படும் மிகப் பெரிய அணு சக்தியினால் பெரும் வெடிப்பும் அதனால் பெரும் அழிவும் ஏற்படும். அணுக்கள் தொடர்ச்சியாக இந்த செயற்பாட்டை தொடர்ந்து செய்வதால் பெருமளவு நிலப்பரப்பில் சேதம் உண்டாகின்றது. அதுமட்டுமல்லாது உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. இந்த அணு ஆயுதங்கள் இது வரையில் ஓரேயொரு முறைதான் சேதம் விளைவிப்பதற்காக உபயோகிக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பான் நாட்டின் மீது அமெரிக்கா அணுகுண்டைப் போட்டு பெரும் அழிவை ஏற்படுத்தியது. அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, சீனா, பிரான்சு போன்ற நாடுகள் தான் முன்னர் இந்த அணு ஆயுதங்களை உருவாக்கின. ஆனால் அண்மையில் இந்தியாவும், பாகிஸ்தானும், இஸ்ரேலும் இவைகளை தயாரித்து அவற்றைப் பரீட்சித்தும் பார்த்துள்ளன. இவை வெடிப்பதனால் சேதங்களை உருவாக்குவது மாத்திரமல்ல, வெடிக்கும் போது அதிக வெப்ப சக்தியையும், வெப்பக் கதிர் வீச்சையும் உண்டாக்கும். இதனால் மிக நீண்ட தூரத்திலும் தோல் எரிவுகள் ஏற்படலாம். பொருட்களும் அதிக வெப்பத்தினால் பற்றி எரியலாம். இதைவிட உடலினுள் புகுந்து தாக்கத்தை உண்டாக்கக் கூடிய கதிர் வீச்சினாலும் சேதங்களை விளைவிக்கலாம். உடலின் நிற மூர்த்தங்களைத் தாக்கி மாற்றியமைப்பதினால் இதன் தாக்கம் பல சந்ததிகளுக்கும் கடத்தப்படலாம். ஜப்பானில் குண்டு போட்ட போது விமானத்தில் அணுக்குண்டு எடுத்துச் சென்று போடப்பட்டது. ஆனால் இப்போது ஏவுகணைகள் மூலம் ஆணுக்குண்டை எடுத்துச் செல்லவும் சில நாடுகள் வல்லமையுடையன.

உயிரியல் ஆயுதங்கள் அல்லது Biological weapon என்பவை சில நுண்ணுயிர்களை உபயோகித்து நோய்களை ஏற்படுத்தி உயிர்களை அழிக்கக் கூடிய வல்லமை பொருந்தியவை. இந்த நுண்ணுயிர்கள் கண்ணுக்குத் தெரியாதவை, மணமில்லாதவை ருசியில்லாதவை. மற்றைய ஆயுதங்கள் பல நூறு ஆயிரம் தொன் நிறையுள்ளதாக தேவைப்படும் போது, உயிரியல் ஆயுதம் ஒரு சில கிலோகிராம்களே போதுமானது. மிகக் குறைந்த செலவிலும் தயாரிக்கப்படலாம். ஒரு சிறிய பரிசோதனை கூடமும், ஓரளவு தொழில் நுட்பம் தெரிந்தவரே இதைச் செய்யக் கூடியதாக இருக்கும். இந்த நோய்க் கிருமிகள் ஒரு இலக்கை அடைந்தவுடன் தாக்கத்தை தொடங்கமாட்டாது. அறிகுறிகளும் தென்படாது. இவை முழுமையாக வளர்ச்சி அடைய 24 மணித்தயாளங்கள் தொடக்கம் 6 நாட்கள் வரை எடுக்கலாம். எனவே அறிகுறிகள் தென்படமுன்னர் வெகுவாகப் பரந்த அளவில் பரவிவிடும். மற்றைய ஆயுதங்களை போல்லாது, பல்லாயிரம் மடங்கு பெருகக் கூடியது. அத்துடன் தொடர்ந்து சில காலங்களுக்கு அழிவை ஏற்படுத்தக் கூடியது. உயிரியல் ஆயுதங்களில் முக்கியமானது அன்தராக்ஸ் - Anthrax எனப்படும் பக்டீரியா ஆகும். இது வழமையாக மண்ணில் வசிக்கும். இதன் வித்திகள் தொடுகை மூலம் அல்லது மூச்சை உள்ளெடுக்கும் போது உடலுக்குள் செல்லும். பின்னர் 1 - 6 நாட்களுக்குள் நச்சுப் பொருள் ஒன்றைச் சுரந்து மரணத்தை விளைவிக்கும் இன்னுமொரு வகை Botulinum Toxin எனப்படும் இந்த பக்டீரியா சுவாசிக்கும் போது உட்சென்று சுவாசக் கோளாறை ஏற்படுத்தி 24 - 72 மணித்தயாளங்களுக்குள் மரணத்தை விளைவிக்கும். இந்த உயிரியல் ஆயுதங்கள் இலகுவாக ஒரு Spray can இல் எடுத்துச் செல்லப்பட்டு விசிறப்படலாம். இதைவிட ஏவுகளண மூலமும் குறித்த இலக்குக்கு ஏவப்படலாம்.


இரசாயன ஆயுதங்கள் நச்சு வாயுக்களை அல்லது திரவங்களை வெளியேற்றி உடலின் நரம்புகளை, தோலை அல்லது சுவாசப்பைகளை தாக்கும் சில பதார்த்தங்கள் நரம்புக் கோளாறுகளினால் பைத்தியம் பிடித்தவர்களைப் போல் செயற்படவைக்கும். எங்களுக்கு தெரிந்தளவில் இரசாயன ஆயுதம்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்** புதிய இடத்தில்

☎: (416) 267-0408




## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 122

**இடமிருந்து - வலம்**

1. தமிழ் ஈழத்தின் தேசிய கீதத்தை இயற்றியவர்
4. உபசாரம் செய் (வல - இட)
6. நண்பன்
8. வேள்வித் தீயில் இடும் உணவு (வல - இட)
9. ஒரு இராகம்
11. வெலி ஓயா என சிங்கள அரசால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட இடம்

**மேலிருந்து - கீழ்**

1. ஒரு காட்டு மிருகம். ஆங்கிலத்தில் Rhinoceros எனப்படும்.
2. தீபத்தால் ஆராதனை செய்தல்
3. பூசு
5. கொம்புள்ள அழகிய மிருகம்
7. பொழுது போக்கில் ஈடுபடுபவன் (கீழ் - மேல்)
8. நீதியற்றது
10. யானையின் கத்தல்

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் SEPTEMBER 28, 2001க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.




**121இல் வெற்றி பெற்றோர்**

1) Mrs. P. Chinniah. Scarborough. Ont.
2) N. A. Nisha. Scarborough. Ont.

*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*

*[Ken-Mark Plaza]*

**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: 044-621-0294

**YARLCAN**

**STEAM CLEANING**

CARPET CLEANING

DUCT CLEANING







உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அழையுங்கள்

மோகன் ☎: (416) 724-9085 Cell: 721-9709

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN Accredited Test & Repair Facility




Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING



>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5



## ACTION HONDA

நேர்மையுடன் தமிழர் நலன் கொண்ட ஈழத்தமிழராகிய **சோதீஸ்** இன் விற்பனைக்கு பின்னருமான சேவையுடன் உங்கள் புதிய பழைய வாகனங்களை எங்கும் கிடைக்காத குறைந்த விலையில் பெற அழையுங்கள்.



**416-704-1179**



*I Will beat any Price*


என் மூலம் **VOLVO** மற்றும் **CHRYSLER** வாகனங்களையும் மலிந்த விலையில் பெற்றுக்கொள்ளவாம்

**LIFE TIME OIL CHANGE, Bad Credit? I WILL HELP YOU**

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்

Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm

4334 Kingston Rd, Scarborough







# அறிவும் ஆக்கமும்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாவிக்கப்பட்டது 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி ஜப்பானில் நடைபெற்றது. ஒரு கள்ளச் சாமியார் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததை அடுத்து அவரின் அடியாட்களில் ஒருவர் புகையிரத வண்டியினுள் SARIN என்ற இரசானப் பதார்த்தம் அடங்கிய சிறிய பெட்டி ஒன்றை வைக்க அதில் இருந்த பிரயாணிகளின் மூக்கிலிருந்தும், வாயிலிருந்தும் இரத்தம் வடிந்து, சிலர் மயக்க முற்றார்கள். இதைப் போல் ஐந்து புகையிரதங்களில் வைக்கப்பட்டது. வைக்கப்பட்டது மிகவும் ஐதாக்கப்பட்ட செறிவு குறைந்த SARIN என்ற பதார்த்தம் என்பதால் உயிர் அழிவுகள் ஏற்படவில்லை.

இந்த இரசாயன ஆயுதங்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்படும். முதலாவது வகை Blister agent எனப்படும். இவை தோலில் கொப்புளங்கள் அல்லது எரிகாயங்களை உண்டாக்கும். இவை உயிரழிவை உண்டாக்குவதை விட பெருமளவில் போர் வீரர்களை காயமடையச் செய்து, போரில் ஈடுபடாதவாறு செய்யும். இது முதலாவது உலக மகாயுத்தத்தின் போது உபயோகிக்கப்பட்டது. இந்த வகையில் Lewisite, Mustard gas ஆகியவை அடங்கும். இரண்டாவது வகை Choking Agents எனப்படும். இதுவும் முதலாவது உலக யுத்தத்தில் உபயோகிக்கப்பட்டது. இது மக்களை மூச்சுத் திணறி இறக்கச் செய்யும். இந்த வகையில் CG எனப்படும் Phosgene வாயு பிரபல்யமானது. மூன்றாவது வகை Blood Agent எனப்படும். ஐதரசன் சயனைட்டு இந்த வகையைச் சாரும். இதனை உட்கொள்ளும் போது அல்லது சுவாசிக்கும் போது இரத்தத்தை நச்சுத் தன்மையாக்கி மனிதரை இறக்கச் செய்யும்.

நான்காவது வகையும் நவீன இரசாயன ஆயுதமாகவும் கருதப்படுவது NERVE agent எனப்படும். 1930 களில் ஜேர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானிகளால் பூச்சிகொல்லிகளுக்காக உருவாக்கப்பட்டது. பின்னர் ஜேர்மனிய 'நாசி' களால் இரசாயன ஆயுதமாக பாவிக்கப்பட்டது. இந்த வகையில் SARIN, TABUN, SOMAN ஆகியவை அடங்கும். மற்றைய மூன்று வகைகளை விட பல நூறாயிரம் மடங்கு கூடிய வல்லமை உடையன. VX என்ற இரசாயனப் பதார்த்தமும், SARIN என்பதுமே மிகவும் கூடிய அழிவை உண்டாக்கக் கூடியன. VX என்பது நிறம், மணம் அற்ற திரவம். தோலினூடாகவோ அல்லது சுவாசிக்கும் போது உட்செல்லக் கூடியது. இது மத்திய நரம்புத் தொகுதியை தாக்கு உயிரழிவை உண்டாக்கும். SARIN - இதுவும் சுவாசத்தினூடாக உட்சென்று நரம்புத் தொகுதியை தாக்கும். இந்த நச்சுப் பதார்த்தங்களான இரசாயன ஆயுதங்கள் சிறிய அளவில் மனிதரால் எடுத்துச் செல்லப்பட்டு விசிறப்படலாம் அல்லது விமான மூலமும் பெருமளவில் கொண்டு சென்று போடப்படலாம்.

நிபுணர்களின் கணிப்பின் பட 1 சதுர கிலோமீற்றர் பரப்பிலுள்ள மக்களை அழிக்க வழமையான ஆயுதங்கள் என்றால் 2000 டொலர்களும், அணு ஆயுதங்கள் என்றால் 800 டொலர்களும், NERVE gas எனப்படும் இரசாயன ஆயுதம் என்றால் 600 டொலர்களும், உயிரியல் ஆயுதம் என்றால் 1 டொலரும் செலவாகும் எனக் கூறப்படுகின்றது.

*********************************************************

*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது* wijeyaku@hotmail.com *என்ற முகவரிக்கு e-mail ஐ எழுதி அனுப்பவும்.*



# ஆரோக்கிய வாழ்வு (66)

- *N.* செல்வசோதி


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**



- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

**Accident & Traffic Ticket**

**(13 Years Insurance Claims Experience)**

**Tel: (416) 245-6555**
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

**Tel: (416) 755-2801**
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.


## பெண்களுக்கு ஏற்படும் இடுப்புவலி முதுகுவலி வருவது எப்படி

பெண்களில் பெரும்பாலானோருக்கு ஒரு குழத்தை பெற்ற பின் எவ்வளவு தான் மெலிதாக இருந்தாலும் சதை அதிகம் போட்டு இடுப்புப் பகுதி, வயிற்றுப் பகுதிகள் பெருத்து விடும். குழந்தை பெறும் காலத்தில் அதிக இரத்தப் போக்கு ஏற்பட்ட காரணங்களால் இரத்த சோகை ஏற்பட்டு உடற் பலம் குன்றி விடுகிறது. முதுகுவலி, இடுப்புவலி சிலருக்கு கால் மூட்டுகளிலும் வலி ஏற்படுகிறது. கால் பாதங்கள் வீங்கி நடக்க கஷ்டப்படுபவர்களும் உண்டு.

மேல்படி ஏறினாலோ கொஞ்ச தூரம் நடந்தாலோ வலி அதிகமாகி விடும். களைப்பு அதிகரித்து படுக்கவேண்டுமென்ற உணர்வு தோன்றும். இவர்கள் தமது எடையைக் குறைப்பதற்கு சாப்பிடாமல் இருந்தாலும் சதை குறையாது. இவ்வாறான வலிகளுக்கு அதிகம் மருந்துகளையும் மாத்திரைகளையும் உட்கொள்வார்கள். இதனால் வலி சிறிது குறைந்தது மாதிரி தெரிந்தாலும் அவ்வப் போது கஷ்டம் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

நாளடையில் தொடர்ச்சியாக உட்கொள்ளும் மருந்துகளில் எதிர்விளைவால் வேறு பல நோய்களுக்கும் ஆளாக வேண்டியிருக்கும். இதற்கு ஒரே வழி யோகசனப் பயிற்சிளைக் கைக்கொள்வதுடன் உணவு முறையில் சில மாற்றங்களைச் செய்வதால் நோய்கள் நீங்கி சுகவாழ்வு பெறலாம். இதற்காக அதிக நேரம் செலவு செய்ய வேண்டியதில்லை தினமும் அரை மணி நேரம் ஒதுக்கினால் போதுமானது.


### பவள முக்தாசனம்

காலையில் வெறும் வயிற்றில் ஆசன நிலையில் 15 தடவைகள் முன்னும் பின்னுமாக அசைய வேண்டும். மாலையில் 15 முறை இந்த ஆசனத்தைச் செய்ய வேண்டும். சாப்பிட்டு 4 மணி நேரம் சென்ற பின் இந்த் ஆசனத்தை மாலையில் செய்ய வேண்டும். நிச்சயமாக கழுத்து முதுகுவலி நீங்கி சுகம் கிடைக்கும்.

மேலும் வெகு விரைவில் நிவாரணம் கிடைக்க, வலி உள்ள இடத்தில் வென்னீர் ஒற்றடம் மாறி மாறி 5 நிமிடங்கள் கொடுத்தால் வலி உடன் நீங்கி விடும்.

### உணவு முறை

காலையில் இயற்கை உணவான தானிய உணவுகளையே உட்கொள்ள வேண்டும். (பச்சைப் பயறு, கொண்டக கடலை ஏதேனும் இலை வகைகள் என்பன) மதியம் காய்கறிகளை அதிகப் சேர்த்தும் அரிசி உணவை குறைத்தும் சாப்பிட வேண்டும். ஏதாவது ஒரு கீரை வகையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.



தனுராசனம்

இரவில் காப்பி, ரீ என்பனவற்றிக்கு பதிலாக புரதச்சத்துக்கள் கலந்த திரவத்தன்மையான உணவு வகைகளைத் தெரிவு செய்து உட்கொள்ளவும். இடைக்கிடையில் தண்ணீர் கள் எலுமிச்சம் சாறும் கலந்து குடித்து வருவது நல்ல பலனைக் கொடுக்கும்.

தொடர்ச்சியாக மேலே கூறப்பட்ட பவள முக்தாசனத்தையும் உணவு முறைகளையும் 15 நாட்களாவது கைக் கொண்டு வந்தால் முழு நிவாரணம் கிடைக்கும்.


தமிழர் நிர்வாகத்தில்

ஒரு



**EMBASSY**

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

**5 SAMOSA $1.00**



Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)
5200 FINCH AVE, SCARBOROUGH

☎ 416-332-8451

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

**பகுதி:- 20** — -Dr. N.S. Moorthy, Ph.D.

அடுத்து வருவது எதிர்த் தன்மை கொண்ட இராசிகளான கடகம் (**Cancer**), மகரம் (**Capricorn**) ஆகியவைகளாகும். இவற்றில் கடகராசியானது பஞ்ச பூதங்களில் ஒன்றான நீரை (**Water**) பிரதிபலிக்கின்றது. அதேவேளை மகர இராசி பஞ்ச பூதங்களில் நிலத்தை (**Earth**) பிரதிபலிக்கின்றது.

மனிதர்களின் உடல் உறுப்புகளைப் பொறுத்த வரையில் கடகராசியானது இரைப்பை (**Stomach**), மார்பகங்கள் (**Breast**) ,சமிபாட்டுத் தொகுதி (**Alimentary System**) ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றது. அதே வேளை மகர இராசியானது உடலின் முழங்கால்கள் (**Knees**), எலும்புகள் (**Bones**). பற்கள் (**Teeth**), எலும்புத் தொகுதி (**Skeletal System**) ஆகியவற்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. சுருங்கக் கூறின் கடகராசி உடலினுள் உள்ள மென்மையான உறுப்புகளையும், மகரராசி உடலின் வெளியமைப்புக்குரிய உறுதியான நிரந்தர உறுப்புக்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது எனலாம். உதாரணமாக தொய்வுற்று பருத்துக் காணப்படும் தொந்திப் பகுதியை உறுதியுடன் இழுத்துப் பிடித்து நிலை நிறுத்தி வைக்கும் நேரான முதுகுப் பகுதியை இந்த இராசிகளின் தொடர்பை விளக்கக் கூறலாம்.

கடகமானது தாய்மைத் தன்மையைக் கொண்டது. தாய்ப் பாலை அமுதமெனக் கூறுவார்கள். மூன்று வயதில் ஞானப்பாலை உண்ட ஞானசம்பந்தனின் பெருமையை நாம் அனைவரும் அறிவோம். குழந்தை பிறந்து இவ்வுலகில் உயிருடன் தொடர்ந்து வளரவும், வாழவும் தேவையானது தாய்ப்பால். கடந்த இருபது முப்பது வருடங்களாக தமது மார்பக அழகைப் பேண முயன்று தாம் பெற்ற பிள்ளைகளுக்கு தமது பாலை வழங்காமல் புட்டிப்பால் வழங்கி வந்து இப்போது வயதான காலத்தில் மார்பகப் புற்று நோய்க்கு (**Cancer**) தமது வாழ்க்கையை இழந்திருக்கும் மேலை நாட்டுத் தாய்மாரின் அவல நிலை நம் அனைவருக்குமே தெரிந்த விடயம். தமக்குப் புற்று நோய் உண்டா இல்லையா என அடிக்கடி பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் இவர்களின் தாய்மையை நாம் என்னவென்பது. இங்கு முக்கியமாக கடகராசிக்கும் புற்று நோய்க்கும் ஒரே ஆங்கிலச் சொல் (**Cancer**) பயன்படுவதை அவதானித்தல் அவசியம்.

நவீன அறிவியல் தாய்ப்பாலின் பெருமையை நன்கு அறிந்து அறிவித்த பின்னர் மீண்டும் தாய்ப்பாலே சிறந்தது எனும் கோஷம் பலம் பெறத் தொடங்கியுள்ளது. இதன் பெருமையை முன்பே நன்கறிந்து நம் பண்டைத் தமிழர்கள் அதற்கும் ஒரு படி மேலே போய் இறைவனைப் "பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து' என்று அழைத்து விளித்து வழிபட்டு வந்துள்ளார்கள் இறைவனுக்கு அடுத்த இடத்தை தாய்மைக்கு வழங்கியது நமது பண்பாடு. அதுமட்டுமில்லாமல் கடவுளையே சக்தி வடிவாக, அன்னை வடிவாக பார்த்து வணங்கி மனமகிழ்வு கொண்டது நமது பழந்தமிழர் பரம்பரை. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று அன்னைக்கு முதலிடம் கொடுத்தது நமது தமிழினம். சைவசமயத் தத்துவத்தின் படி கூட பெண்மைக்குச் சம அந்தஸ்துக் கொடுத்து தமதுடலில் அரைப்பகுதியை வழங்கி அம்மை அப்பனாக அர்த்தநாரீஸ்வரர் உருவமெடுத்ததாக சிவனைப் பற்றிப் புராணங்கள் கூறுகின்றன.

கல்விக்கும் செல்வத்துக்கும் வீரத்துக்கும் உரிய தெய்வங்களாக பெண் தெய்வங்களையும் அவர்களுக்கென சிறப்பான பூசைகளையும் விரதங்களையும் கடைப்பிடிப்பது எமது பைந்தமிழர் பண்பாடென்பதை நாம் பெருமையுடன் கூறிக் கொள்ளலாம். தாயன்பை பெறாத குழந்தையின் உடல் உள வளர்ச்சிகள் பாதிக்கப்படுவதாக இக்கால மருத்துவம் கூறுகின்றது. அது மட்டுமல்லாமல் தாய்ப்பாலில் காணப்படும் கல்சியம் போன்ற உயிரூட்டச் சத்துக்களே குழந்தையின் எலும்புகளை பலம் பெறவும், வளம் பெறவும், வளரவும் செய்யவல்லன என்பது நிரூபணமான உண்மையாகும். பற்களின் உறுதிக்கும் இது அத்தியாவசியமானதாகும்.

மேற்கூறிய விடயங்களிலிருந்து தாய்மைத்தன்மை கொண்ட கடகராசிக்கும் பற்களின் எலும்புகளுக்குப் பொறுப்பான மகரராசிக்கும் உரிய நேரடித் தொடர்புகள் தெரிய வருகின்றன.

மேலும் பஞ்ச பூதங்களில் மகர ராசிக்கு நிலத்தை ஒப்பிட்டுள்ளனர். அதாவது மனித உடல் அழிந்து சிதைந்து உருக்குலைந்து போன பின்பும் இறுதியாக எஞ்சும் எலும்புகளும் பற்களும் மண்ணோடு மண்ணாவதை நாம் காணக் கூடியதாகவுள்ளது. மண்ணுக்கும் நம் உடலுக்கும் நெருங்கிய பந்தமுள்ளது என்பது காலங்காலமாகக் கூறப்பட்டு வரும் கருத்தாகும். முடியாண்ட மன்னர் கூட ஒரு பிடி சாம்பலாகி மண்ணோடு மண்ணாவார் என்பது நடைமுறை உண்மையாகும். மண்ணுக்காக மனிதன் நடாத்திய நடாத்தி வரும் போர்கள் தான் எத்தனை? இதைப் பண்டைய தமிழ் மக்களும் இன்றைய தமிழினமும் நன்றாகவே உணர்ந்துள்ளார்கள். கடக இராசியைக் கட்டுப்படுத்துவது சந்திரன் ஆகும் எனவே தான் இந்த இராசிக்காரர்கள் தாய்மை, பொறுமை, அடிக்கடி மாறுபடும் தன்மை, உணர்ச்சிகளை ஆழமாகப் புதைத்து வைத்தல் போன்ற குணநலன்களைக் கொண்டிருப்பார்கள்.

அதே வேளை மகரராசியைக் கட்டுப்படுத்துவது சனிக்கிரகமாகும். மெதுவாகச் செயற்படல், வியாபிக்கும் தன்மை, முழுமையாக ஈடுபடல், தவிர்க்க முடியாத நிலையை ஏற்படுத்துதல் போன்றவை மகர ராசிக்காரர்களுக்கு கைவந்த கலையாக இருக்கும். இவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கலாம்.

தொடரும்.....



Kiruba Kirushan
*Service with a Broad Smile*

**EASY HOME BUY**
வீடு விற்க வாங்க மற்றும் MORTGAGE வசதிகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்.
Thinking of Buying A Home or Selling Your Home and All Kind of Insurance!
With a small down payment, you could own your dream home.

FOR ALL YOUR HOUSING NEEDS CALL
**416-414-5562**

**யோகா சோதிடம்**

★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
★ சுபமுகூர்த்தம் கணித்தல்
★ சாதகக்குறிப்புக் கணித்தல்
★ பலன் பார்த்தல்
☎: (416) 299-8361

**Safety Truck**
**Training School Ltd.**
Training & Trucking Classes A, D & Z
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.
**We accept Welfare & Unemployment Insurance**


தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
14 Years Canadian Experience with Trucks)
Tel: (905) 793-9546 / (416) 616-5979
250 Summerlea R[illegible] Brampton, ON

# விளையாட்டுத் தகவல்கள் (84)

-எஸ். கணேஷ்




## சாதனை மேல் சாதனை!!!

**தமிழ் வீரன் முத்தையா முரளிதரன்**

**கிரிகெட்**

கடந்த 'உலக தமிழோசை' இதழில் முரளிதரனின் அதிரடித் துடுப்பாட்டம் பற்றியும் முதலாவது டெஸ்டில் (இந்தியா **vs** ஸ்ரீலங்கா) **Man Of The Match** விருது பெற்றதைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். மூன்றாவது டெஸ்ட் போட்டியில (இந்தியா **vs** ஸ்ரீலங்கா) மீண்டும் முரளிதரன் **'Man Of The Match** விருதும்', **'Man Of The Series'** விருதையும் தட்டிக் கொண்டார். இப்போது கிரிகெட் உலகில் தொடர்ந்து சாதனை புரியும் **Super Man** ஆக கணிக்கப்படுகின்றார். இப்போது 31 வயதுடைய முரளிதரன் **World Record** ஆன பந்து வீச்சாளர் **Walsh's** இன் 519 விக்கெட்டுகளை முறியடிக்கும் நாள் வெகு விரைவில் காத்திருக்கின்றது.

**COCA COLA CUP தொடரில் Man of the Match விருது - முரளீதரன்**




ஸ்ரீலங்கா **vs** இந்தியா டெஸ்ட் தொடர் 2 - 1 நிலையில் ஸ்ரீலங்கா வெற்றி பெற்றது. இதை அடுத்து **Asian Champion Ship** போட்டியில் ஸ்ரீலங்கா அணி பங்களாதேசத்துடன் மோதியாது. இதில் முரளிதரன் மீண்டும் உலக சாதனையை முறியடித்துள்ளார். இதில் மீண்டும் இரண்டு சாதனையை படைத்துள்ளார். முதலாவதாக பங்களாதேஷ் ஆட்டத்தில் ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் 7 வது தடவை ஒரே ஆட்டத்தில் 10 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். நியூசிலாந்து பந்து வீச்சாளர் ஆன **Richard Hadlee** 9 தடவைகள் 10 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் 66 வது டெஸ்ட் ஆட்டத்தில் முரளிதரன் 350 வது விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார். உலக சாதனையாக இருந்த **Richard Hadlee** இன் 69 டெஸ்ட் ஆட்டங்கள் 350 விக்கெட்டுகளை முரளிதரன் 3 ஆட்டங்களால் முறியடித்துள்ளார். இவ் வருட முற்பகுதியில் முரளிதரன் 300 வது விக்கெட்டை **South Africa** இல் வைத்து கைப்பற்றினார். இந்த சாதனை 58 வது ஆட்டத்தில் நிகழ்த்தினார். இது அவுஸ்திரேலியர் ஆன **Dennis Lillie** இன் சாதனையை இரண்டு ஆட்டங்களால் முறியடித்தார். இப்போது 58 வது டெஸ்ட் ஆட்டத்தில் இருந்து 66 வது டெஸ்ட் ஆட்டத்தில் (8 டெஸ்ட் ஆட்டங்களில்) **Richard Hadlee's** இன் சாதனையை முறியடித்து உலகத்தில் 350 விக்கெட்டை மிக குறைந்த டெஸ்ட் ஆட்டங்களில் (66) பெற்ற முதலாவது பந்து வீச்சாளர் என்ற பெருமையும் இந்த தமிழ் வீரன் முத்தையா முரளிதரன் பெறுகின்றார்.

**Asian Test Champion Ship ஆட்டத்தில் முரளிதரனுக்கு Man of the Match விருது**




இந்த தமிழ் வீரனை விட்டால் ஸ்ரீலங்கா அணியின் கதி என்னவாயிருக்கும் என்பது கேள்விக் குறியே? மற்றைய நாட்டு அணித் தலைவர்கள் முரளியைப் போல ஒரு வீரர் தமது நாட்டுக்கு கிடைக்க மாட்டார்களா? என்று கனவு காண்கின்றார்கள். இந்தத் தமிழ் வீரனை வைத்து பல வெற்றிகளை ஸ்ரீலங்கா அணி. குவிக்கிறது. தமிழ் வீரன் முத்தையா முரளிதரன் மேலும் பல சாதனைகளை புரிய வாழ்த்துவோமாக!

## Asian test Championship


ஸ்ரீலங்கா **vs** பங்களாதேஷ் செப்ரெம்பர் 6, 7, 8, 9, 2001

முதலில் துடுப்பாடிய பங்களாதேஷ் அணி 36 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 90 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதில் வாஸ் 14 ஓவர்களில் பந்து வீசி 2 மேடின் போட்டு 47 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார். முரளிதரன் 9 ஓவர்கள் மட்டுமே பந்து வீசி 4 மேடின் போட்டு 13 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். அடுத்து களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி 103 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 555 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஸ்ரீலங்கா சார்பாக அத்தபத்து 201 ஓட்டங்களையும், ஜெயவர்த்தனா 150 ஓட்டங்களையும், ஜெயசூரியா 89 ஓட்டங்களையும் பெற்றனர். அடுத்து களம் இறங்கிய பங்களாதேஷ் அணி 101 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 328 ஓட்டங்களை எடுத்தது பங்களாதேஷ் அணியில் **Mohammad Ashraful** 114 ஓட்டங்களை எடுத்தார். மீண்டும் முரளிதரன் இரண்டாவது இனிங்சில் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன் மூலம் ஸ்ரீலங்கா அணி இனிங்சாலும் 137 ஓட்டங்களாலும் வெற்றி பெற்று **Asian Champion Ship Test** இறுதியாட்டத்தில் பாகிஸ்தானுடன் மோதுவதற்கு தகுதி பெற்றுள்ளது. இந்த ஆட்டத்தில் மீண்டும் முரளிதரன் 10 விக்கெட்டுகளை ஒரு ஆட்டத்தில் எடுத்தபடியினால் **Man of the match** விருதை தட்டிக் கொண்டார். பங்களாதேஷ் அணி சார்பாக **Mohammad Asharful** ஆட்ட நாயகன் விருதை தட்டிக் கொண்டார்.

இவ்வாட்டத்தில் ஸ்ரீலங்கா சார்பாக அத்தபத்து இரண்டு சதங்களை (201) போட்டார். இது வரை அத்தபத்து 5 தடவைகள் இரு சதங்களை போட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இரட்டைச் சதங்களை இது வரை போட்டவர்களின் விபரங்கள் பின்வருமாறு

| வீரர்களின் பெயர் | | மொத்த இரட்டைச் சதங்கள் 200's | அவுஸ்ரேலியா Aus | இங்கிலாந்து Eng | சவுத் ஆபிரிக்கா SA | மேற்கு இந்தியன் WI | நியூசிலாந்து NZ | இந்தியா Ind | பாகிஸ்தான் Pak | ஸ்ரீலங்கா SL | பங்களாதேஷ் BL |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| DG Bradman | Aus | 12 | - | 8 | 2 | 1 | - | 1 | - | - | - |
| WR Hammond | Eng | 7 | 4 | - | - | - | 2 | 1 | - | - | - |
| Javed Miandad | Pak | 6 | 1 | 1 | - | - | 2 | 1 | - | 1 | - |
| MS Atapattu | SL | 5 | 1 | 1 | 1 | - | - | - | 1 | - | 1 |
| L Hutton | Eng | 4 | 1 | - | - | 2 | 1 | - | - | - | - |
| SM Gavaskar | Ind | 4 | - | 1 | - | 3 | - | - | - | - | - |
| GS Chappell | Aus | 4 | - | - | - | - | 1 | 1 | 2 | - | - |
| CG Greenidge | WI | 4 | 1 | 2 | - | - | 1 | - | - | - | - |
| Zaheer Abbas | Pak | 4 | - | 2 | - | - | - | 2 | - | - | - |
| BC Lara | WI | 3 | 2 | 1 | - | - | - | - | - | - | - |
| IVA Richards | WI | 3 | 1 | 2 | - | - | - | - | - | - | - |
| RB Simpson | Aus | 3 | - | 2 | - | 1 | - | - | - | - | - |

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA
PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
☎ (416) 410-6401

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம்

*1985ஆம் ஆண்டு வெளிவந்த படங்கள்*

**ஆண்பாவம்:-**

சீதா



இப் படத்தின் கதை, திரைக்கதை வசனம் டைரக்ஷன் ஆர். பாண்டியராஜன். ஆர். பாண்டியராஜன், பாண்டியன், ரேவதி, சீதா, வீ. கே. ராமசாமி மற்றும் பலர் நடித்திருந்த இந்தப் படம் முழுநீள நகைச்சுவைப் படம். இசை இளையராஜா. பாண்டியன், பாண்டியராஜன் ஆகிய இருவரும் சகோதரர்களாக நடித்துள்ளார்கள். பாண்டியன் இந்தப் படத்தில் காதலித்து சண்டை போட்டு தன் பெயரைக் காப்பாற்றியுள்ளார். பாண்டியராஜன் கலகலப்பு உண்டாக்கியுள்ளார். சீதாவிற்கு இது முதல் படம் என்றாலும் திறம்படவே நடித்துள்ளார். மற்றும் ரேவதி, வீ. கே. ராமசாமி, ஜனகராஜ் ஆகியோர் தங்கள் பாத்திரங்களை திறம்பட நடித்துள்ளார்கள்.

**ஆகாயத்தாமரைகள்:-**

வி. கே. ராமசாமி



இப் படத்தின் நடிக - நடிகையர் ஆக சுரேஸ், சத்தியராஜ், ரேவதி, மனோரமா, கவுண்டமணி, செந்தில் மற்றும் பலர் நடித்துள்ளனர். கங்கை அமரன் இப் படத்திற்கு இசை அமையத்துள்ளார். வி. அழகப்பன் இப் படத்தை இயக்கியுள்ளார்.

ஒரு கிராமத்தில் ஜாதியின் பெயரால் நடக்கும் கொடுமைகளைக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கதையாகும். அக் கிராமத்தில் உள்ள பெரிய மனிதர் என்று சொல்லப்பட்டு வருபவர் தனக்கு என்று ஒரு நியாயமும் மற்றவர்களுக்கு என்று ஒரு நியாயமும் என்ற வகையில் செயல்பட்டு வருகிறார். வேற்று சாதிப் பெண்ணை காதலிக்கவோ திருமணம் புரியவோ கூடாதென்ற ஒரு கட்டுப்பாட்டை ஊர் மக்களுக்கு விதித்த அவர் மட்டும் பல சாதிப் பெண்களுடன் மகிழ்ச்சியாக இருக்கிறார். அவரிடம் வேலையும் புரியும் அடியாள். அவனுக்கு ஒரு தங்கை. அவள் ஒருவனைக் காதலிக்கின்றாள் தங்கையின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த அண்ணனை எதிர்த்து அந்த வாலிபனை திருமணம் செய்து கொள்கிறாள்.

மனோரமா



ரேவதி மிகச் சிறப்பாக நடித்துள்ளார். நகைச் சுவைக் காட்சிகள் சிறப்பாக அமைந்துள்ளன. பழைய கருத்தாக இருந்தாலும் அதை எச்சரிக்கையுடன் செயலாற்றி இயக்கி வெற்றி கண்டுள்ளார் வேந்தன் பட்டி அழகப்பன்.

செந்தில்



**நட்சத்திரங்களின் முதல் படம்**

- ✳ வெண்ணிற ஆடை நிர்மலா-- வெண்ணிற ஆடை
- ✳ பி.பானுமதி--நல்லத்தம்பி(தமிழில்)
- ✳ ஜெயசித்ரா--குறத்தி மகன்(100-வது படம் நாயக்கர் மகள்)


**VIMAC HOME RENOVATIONS**

SPECIALIZING IN INSTALLATION OF
- * KITCHEN CABINETS
- * COUNTER TOPS
- * SPACE MAKING CABINETS
- * BATHROOM /LAUNDRY UNITS

FREE ESTIMATE

& GENERAL HOME RENOVATION

CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227

REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES







# தூறல்

தருபவர் - வானரன்

## Toronto International Film Festival

சுமார் 13 வருடங்களுக்கு முன்பு, ஒரு நாள் சனிக்கிழமை அன்று காலை 6 மணிக்கு முதல் metro பிடித்து, வரிசையில் நின்று ரிக்கற் எடுத்து மிகுனான் சென்னின் படம் பார்த்த ஞாபகம். படத்தை விட அந்த அதிகாலையில் 8 மணிக் காட்சி என்ற ஞாபகம் **Varsity** தியேட்டரில் சுமார் 100 பேருக்கு மேல் வரிசையில் நின்று, **Donut shop** இல் தேநீர் குடித்து, படத்தைப் பற்றிய முன் மாதிரிகளை அளவளாவியது இன்னமும் ஒரு சுகமான அனுபவம். படம் முடிய அதைப் பற்றி சுமார் ஒரு மணி நேரம் மீண்டும் அதே **Donut shop** இல் அளவளாவிய மற்றொரு அனுபவம்.

பின்னர் ஒரு தடவை பிரபல மலையாள இயக்குனர் அடூர் கோபால கிருஷ்னனின் 'கதாபுருஷன்' படம் பார்த்து விட்டு கோப்பிக் கடையில் சுமார் 2 மணி நேரம் அவருடன் கதைத்துள்ளோம். இவை யாவும் **Toronto** இல் நடைபெறும் **Film Festival** இல் படம் பார்த்த பின்னர் நடைபெற்றவை. 1976 ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட இந்த **Toronto Film Festival** இன்று Cannes **Festival** க்கு அடுத்ததாக மிகவும் மதிக்கப்படும் ஒரு **Festival** ஆகும். சுமார் 175 க்கு மேற்பட்ட **Future Films, Documentaries, Short Films** என்பன காட்சியளிக்கப்படுகின்றன. September மாதம், முதலாவது வாரம் தொடங்கி சுமார் இரு வாரங்கள் நடைபெறும் இவ்விழா **Toronto** மாநகருக்கும் கனடாவுக்கும் பெருமையளிக்கின்றது. இவ்விழாவில் **People choice awards** எனும் விருதும் வழங்கப்படுகிறது. சென்ற வருடம் இவ்விழாவில் பிரபல தாய்வானிய படமான **'Crouching Tiger' 'Hidden Drogon', Angbee** இயக்கிய படம் பெற்றுக் கொண்டது. அதேபோல் 1999 ஆம் ஆண்டு **Sam Mardes** இயக்கிய **American Beauty** என்ற படமும், 1998 ஆம் ஆண்டு இத்தாலிய படமான **Life is Beautiful** இயக்குனர் **(Roberto Benigni)** என்ற படமும் பெற்றுக் கொண்டன.



பொதுவாக இவ்விழாவில் விருதுகள் பெறும் பார்வையாளர்களால் பாராட்டும் படங்கள் ஒஸ்கார் விருதுகளையும் தட்டி செல்கின்றன. இவ்வருடம் பல நல்ல திரைப் படங்கள் காட்சியளிக்கப்படுகின்றன. குறிப்பாக இன்று உலக அரங்கில் நல்ல திரைப் படத் தயாரிப்பு நாடுகளான ஈரான், இத்தாலி, **Austria, Australia** போன்ற நாடுகளில் இருந்து பல படங்கள் காட்சியளிக்கப்பட்டன.

***உதாரணத்துக்கு சில படங்கள்***

### Asoka

1998 இல் பிழையான கருத்துக் கொண்ட, சிறப்பான காட்சி படிமங்களைக் கொண்ட படம் **'The Terrorist'**. இப் படத்தை இயக்கியவரும் இப் படத்தின் நாயகியான மல்லியின் பெயரைக் கொண்ட, மல்லி என்னும் குழந்தைகளுக்கான படத்தை இயக்கிய வருமான சந்தோஷ் சிவனின் **"Asoka"** என்னும் படம் திரையிடப்படுகிறது. அசோகனின் வாரிசான **Magadha** வை மையாகக் கொண்டு பிணைக்கப்பட்டுள்ள இப்படம் மீண்டும் அகிம்சையை வற்புறுத்துகிறது. பழமைக்கு மாறாக இவர் இம்முறை சாருக்கானை கதாநாயகனாக்கியுள்ளார்.

### மாயா

மாயா என்னும் 12 வயது பெண் குழந்தையும், Sonjah என்ற ஆண் குழந்தையும் ஓர் மத்திய மேல் நாட்டு வர்க்க குடும்பத்தினரால் தத்து எடுக்கப்பட்டு வளர்க்கப்படுகிறார்கள். வழமை போல் எந்தவித இடையூறுகளுமின்றி அவர்கள் வளர்கிறார்கள். மாயா பெரிய பெண் ஆகிறாள். அவள் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படுகிறாள். அங்கை போகாதை, சமையல் செய் இவற்றை விட அவளது வளர்ப்பு பெற்றோரால் அவளை பெற்றெடுத்த பெற்றோரிடம் கொண்டு செல்லப்பட்டு, அங்குள்ள சமய குருமாரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுகிறாள். இது ஒரு சமய சடங்காக நடைபெறுகிறது.

**Royal Ontario Museum** இல் காட்சியளிக்கப்பட்ட இப்படத்தை பார்த்தோர் அனைவரையும் **Maya** கலங்கச் செய்து விட்டாள். **Digvijay Singh** என்ற இந்திய இயக்குனர் இயக்கிய அமெரிக்கப் படமே. ஆச்சரியமாகவுள்ளதா இது ஓர் அமெரிக்கப் படமே இது. காமசூத்திராவும் அமெரிக்கப் படமே. **Fire** கனடிய படம். இந்திய கலாச்சார கோளாறுகளை வெளிக் கொணர்வதில் அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் இருக்கும் அக்கறை ஆகா, ஆகா. ஆனால் நாங்களும் இவ்வாறான செயற்பாடுகளை நினைத்து வெட்கப்பட வேண்டும்.

### Baran

**Majid Majidi** இயக்கியுள்ள இப் படம் ஈரானில் உள்ள ஆப்கானிஸ்தானிய அகதிகளைப் பற்றிய படமாகும். **Rahamat** என்னும் இளம் ஆப்கானிஸ்தானிய அகதி வேலையாளுக்கு, உதவி செய்யும் **Kareaf** என்னும் ஈரானியரையும் மையமாகக் கொண்டு பிணைக்கப்பட்டுள்ளது இப்படம். அற்புதமான படப்பிடிப்பாலும், சிறப்பான இயக்கத்தாலும் பல கேள்விகளை எழுப்பிச் செல்கிறது. கனடாவின் நிரந்தர பிரஜைகளாக நாங்கள் இருந்த போதிலும் அடிப்படையில் நாங்களும் அகதிகள் தான். இப் படத்தைப் பார்க்கும் பொழுது வரும் இந் நினைவு யாதார்த்தமானதே. இவற்றை விட பல குறிப்பிடத்தக்க படங்கள் திரையிடப்படுகின்றன. Now, Eye போன்ற இலவச பத்திரிகைகளில் இவை பற்றிய பல விபரங்கள் உள்ளன.

அத்துடன் **http: // www.e.bell.ca/filmfest/2001** என்ற **web** தளத்திலும் பல விபரங்களை பெற்றுக் கொள்ளலாம். உதாரணத்துக்கு சில மேலும் சில படங்கள்

| | | |
|---|---|---|
| **Last Wedding** | - | **Canada** |
| **Silent Partner** | - | **Australia** |
| **Models** | - | **Austria** |
| **Be My Star** | - | **Austria** |
| **Unfinished song** | - | **Iran** |
| **Water boys** | - | **Japan** |
| **A dog's day** | - | **India** |
| **La CI ENAGA** | - | **Argenta** |
| **The Last Kiss** | - | **Italy** |
| **M onsoon Wedding** | - | **India** (மீரா நாயர்) |

நல்ல திரைப்படங்களைப் பார்ப்பதற்கு தேடல் அவசியம். கனடாவில் பல நல்ல வசதிகள் உண்டு. **International Film Festival** அமைப்பின் உப அமைப்பான **Cinematheque Ontrario** வருடம் தோறும் பல நல்ல திரைப் படங்களை திரையிடுகிறது. சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது இவற்றைப் பயன்படுத்தி நாளை கனடாவில் இருந்து தரமான பல படங்களை எம்மவர் இயக்க வேண்டும். இது நடைபெறும் என்ற நம்பிக்கை எம் இளம் சந்ததிகளைப் பார்க்கும் பொழுது நிறையவே உள்ளது.


**KAMLA**
**NGU-YEN**
**Sales Rep.**



**416 - 491-4002**

**RE/MAX Crossroads Realty Inc.**

*THINKING OF SELLING*

**SCARBOROUGH-BIRCHMOUNT & STEELES**

**Solid Italian built. 4 + 1 bedroom with 2 kitchens, separate entry to basement, main floor family room & double garage. Parquet and ceramic floors thru-out, beautifully landscaped & maintained. Like a mansion.**

**RICHMOND HILL - $349,900**

**Stunning, spacious executive home Offers: 4 large bedrooms main floor library & family room. entrance to garage from main floor laundry over 3000 sq ft. of luxury.**

**MARKHAM - SHOWS LIKE A MODEL**

**Move-up to this newer executive style home, 4 spacious bedooms, hardwood floors, hug kitchen, family room, double garage & lots more.**

**Call now to view won't last**

# விண்வெளி

## அந்நியார்கள்:- ஏலியன்கள் 69

*தருபவர்- கனி*

"பெரு" நாட்டில் பத்தாயிரம் வருடங்களின் முன் ஏலியன்கள் சஞ்சரித்திருக்கக் கூடும் என்ற ஐயம் அங்கு கண்டெடுக்கப்பட சில வித்தியாசமான மண்டை ஓடுகளில் இருந்து மாத்திரம் ஏற்படவில்லை. இன்னமும் பல தடயங்களை அங்கு கண்டுள்ளார்கள் ஆய்வாளர்கள். அவற்றில் ஒன்று அவர்களின் நீர்பாசனத் திட்டம். நீர் தேங்கி இருக்கும் இடங்களில் இருந்து அல்லது நீர் பாய்ந்து ஓடும் இடங்களில் இருந்து பல வாய்க்கால்களை வெட்டி தமக்குத் தேவையான இடங்களுக்கு நீரை வரவழைத்திருக்கின்றார்கள். இதில் என்ன இருக்கிறது! வெறும் வாய்க்கால்கள் தானே என்கிறீர்களா? பல வாய்க்கால்களை சில நூறு மைல்கள் தூரத்திற்கு மிக நேர்த்தியாக நீர் வீணே விரயமாகாத வண்ணம் இந்த வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளன. வாய்க்கால்களின் சில இடங்கள் ஆழமாகவும் சில இடங்கள் அசலமாகவும் அமைக்கப்பட்டு நீரோட்டமானது சீர் செய்யப்பட்டு இருந்தது. தேவைக்கு ஏற்ப சில மேட்டு நிலங்களை விலத்தியும் வேறு சில மேட்டுப் பகுதியை ஊடறுத்தும் இ[illegible] வாய்க்கால்கள் காணப்பட்டன. இன்று வறண்டு காணப்படும் இந்த வா[illegible]கால்கள் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றன. இனி ஆய்வாளர்களின் விளக்கங்களுக்கு வருவோம்.

இவ்வளவு நேர்த்தியான ஒரு நீர்ப் பாசனத் திட்டத்தை இன்று வாழும் விற்பன்னர்கள் செய்திருப்பார்களோ அல்லது செய்யத் துணிந்திருப்பார்களோ என்றால் இல்லை என்று தான் கூற வேண்டும் என்கிறார்கள். எகிப்தின் பிரமிட்டுக்கள் போன்றே இந்த வாய்க்கால்களும் அதிசயமானவைதான் என்கிறார்கள். ('பெரு நாட்டில் கூட சில பிரமிட்டுக்கள் காணப்படுகின்றன') பத்தாயிரம் வருடங்களுக்கு முன் இவர்களுக்கு எவ்விதம் இந்த அறிவு வந்தது? இவ்வளவு அறிவுடைய சமுதாயத்திற்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே? அவர்களின் அறிவியல் வளர்ச்சி ஏன் மேம்படவில்லை? இது போன்ற கேள்விகளை ஆய்வாளர்கள் கேட்கின்றார்கள். அதற்கான விடைகளையும் அவர்களே கூறுகின்றார்கள். அவர்களின் கருத்துக்களைப் பார்ப்போம்.


சுமார் பத்தாயிரம் வருடங்களின் முன்னர் பெரு நாட்டிற்கு அல்லது அப் பகுதியிற்கு விண்வெளியில் இருந்து அறிவு மேம்பாடுடைய ஏலியன்கள் வந்திருக்க வேண்டும். அங்கிருந்த மனிதர்கட்கு பல வகைகளிலும் உதவிகள் புரிந்திருக்க வேண்டும். அந்த ஏலியன்களின் உதவியினாலேயே அறிவிற் குறைந்த அன்றைய பெரு நாட்டு மக்கள் அந்த நீர்ப் பாசன அமைப்பை அமைத்திருக்க வேண்டும். அங்கு கட்டப்பட்டு இருக்கும் அல்லது அமைந்திருக்கும் பிரமிட்டுக்கள் கூட இந்த ஏலியன்களின் நிர்மானமாகவே இருக்க வேண்டும். ஏதே ஒரு காரணத்தால் இந்த ஏலியன்களின் தொடர்பு இல்லாது போக - ஏலியன்களால் வழங்கப்பட்ட உயர் தொழில் நுட்ப அறிவை எடுத்து மேம்படுத்த முடியாது போக அந்த அளவிலேயே எல்லாம் அ[illegible]டத்தில் நின்றுவிட்டது. அந்த ஏலியன்கள் "பெரு" நாட்டினருக்கு வழ[illegible]கியவற்றின் தடங்கள் இன்னமும் இருக்கின்றன.

இவற்றை எல்லாம் உறுதிப்படுத்துவது போல், ஏலியன்களின் வருகையை மறுப்பவர்களால் கூட இல்லை என்று சொல்ல முடியாத தடயம் ஒன்று இன்னமும் பளிச் சென்று இந்த நாட்டிலே உள்ளது. 'பெரு' நாட்டின் உயர்ந்த மலை ஒன்றிலே அதன் முகட்டிலே தான் அந்த அதிசயமான காட்சி உள்ளது. மலையின் உயர்ந்த பகுதியில் பல நீண்ட அகலமான பாதைகள் செதுக்கப்பட்டுள்ளன. இந்த நேரான பாதைகள் விமானம் ஒன்றின் ஓடு தளத்தை ஒத்து இருக்கின்றன. இந்த மலையின் மேலாகப் பறக்கும் விமானத்தில் இருந்து இந்த அழகிய காட்சியைக் காணலாம் என்கிறார்கள். இந்த ஓடு பாதைகள் இருக்கும் இடத்தில் மிகப் பெரிய 'சிலந்தி' யின் உருவமும் செதுக்கப்பட்டுள்ளது. ("பெரு' நாட்டின் சுற்றுலாப் பயணிகள் எல்லோருமே விருப்புடன் - வியப்புடன் இந்தக் காட்சியைப் பார்க்கச் செல்வார்கள்.) இந்த ஓடு பாதைகள் எல்லாம் ஏலியன்களின் - அந்நியார்களின் விமானங்கள் வந்திறங்குவற்காக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்; பெரிய சிலந்தியின் உருவம் விமானங்களை - விண்கலங்களை இறக்குவதற்கு சரியான இடத்தை வானில் இருந்து பார்ப்பவர்கட்கு காட்டுவதற்காக செதுக்கப்பட்டு இருக்க வேண்டும். பல ஓடு தளங்கள் இருப்பதனால் கணிசமான அளவு விண்கலங்கள் வந்திருக்கலாம் அல்லது காற்று போன்ற காலநிலைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப எந்த நிலையிலும் விண்கலங்களை தரை இறக்க அமைக்கப்பட்டு இருக்கலாம் என்கிறார்கள்.

சரி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். நமது பூமியிற்கு விண்வெளியில் இருந்து அந்நியர்கள் வந்திருக்கிறார்கள் என நம்புகிறீர்களா? இல்லை குழப்பமாக உள்ளது என்கிறீர்களா? இன்னமும் பல தகவல்கள் - தடயங்கள் விண்வெளி அ[illegible]ர்கள் பற்றி உள்ளது.

தொடரும்....


**NEW Technology**
Security and Sound Inc.



Tel: (416) 335-4070
Fax: (416) 335-9936


உங்கள் வாகனங்களுக்குத் தேவையான



Car Alarm, Remote Car Starter, LED Scanner, Stereo, Fog Lamps and Sports Accessories.
Sales And Installation

CASSETTE PLAYER STARTUP 109.99

CD CASSETTE PLAYER STARTUP 159.99



CLIFFORD — The Science Of Security


toucan INDUSTRIES. INC.

VIPER

AVITAL Vehicle security

Pioneer

PRESTIGE



* *We also do any Electrical*

நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும் பொருத்திக்கொள்ளவும் நாடுங்கள்.

Tel: (416) 335-4070

3501 McNicoll Ave., Unit #9, Scarborough, Ont M1V 2N3

Autobahn — Steeles Ave, Passmore Ave., McNicoll Ave., Finch Ave, Mccowan Rd, Middlefield Rd, Markham Rd, 3501 #9




YARL **WINDOW COVERING**

**1530 WARDEN AVENUE**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்

**CUSTOM MADE..**
- VENETIAN BLINDS
- VERTICAL BLINDS
- ROLLER BLINDS
- PLEATED SHADES
- DRAPERIES



இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்தக் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE




**JEY JEY WELDING**

- வீட்டுத் தேவைகளிற்கான சகலவிதமான **Grill** வேலைகளும்
- **Swimming Guard Rails**
- **Fencing**
- **Safety Grills for Store**
- **BSMT Safety Grills**
- **Welding** சம்பந்தமான வேலைகள்
- கோயிலிற்கு தேவையா **Grill** வேலைகள்

அனைத்து வேலைகளிக்கும் அழையுங்கள்: **416 439 - 7159**

# கனடிய பொருளாதாரம்

## கணக்கியல் பொருளியல்



தனிநபர் வியாபாரக் கணக்குகள்

நீங்கள் மற்றவர்களுக்குக் கீழே வேலை செய்து களைத்துவிட்டீர்கள். உங்களுக்கு நீங்களே முதலாளியாக வேலை செய்வதுதான் நல்லது. நீங்கள் சொந்தமாக ஒரு வியாபாரத்தை ஆரம்பித்தால் என்ன?... இப்படியெல்லாம் நீங்கள் பல நாட்களாக சிந்தித்து வருகிறீர்கள். இது எப்படி எனக்குத் தெரியும் என்று நீங்கள் கேட்கலாம். ஏன் என்றால் நானும் ஒரு நேரத்தில் உங்களைப் போல சிந்தித்தவன் தான்.

ஒரு வியாபாரத்தை சொந்தமாக நீங்கள் தொடங்குவதற்கு முன்பாக அவற்றில் உள்ள நன்மை தீமைகளை நீங்கள் முன் கூட்டியே அறிந்து வைத்திருப்பது நன்மையாக இருக்கும். இதன் மூலம் இதைப்பற்றியெல்லாம் தெரியாமல் நான் சொந்தமாக வியாபாரம் தொடங்கியது தப்பு என்று ஒரு நேரத்தில் வருத்தப்படுவதை தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

சொந்தமாக வியாபாரம் செய்வதனால் கிடைக்கக் கூடிய வருமான வரி சம்பந்தமான சலுகைகள் மற்றும் வியாபாரத்தை எப்படி நடத்துவது என்று நீங்களே முடிவு செய்யும் வாய்ப்பு என்பன போன்ற நன்மைகளைத் தவிர இதனால் நீங்கள் விட்டுக் கொடுப்பன என்ன என்று பார்ப்போம்.

1. உங்களுக்கு வேலைக் காப்புறுதி (**Employment Insurance**) இருக்காது.
2. உங்கள் கனேடிய காப்புறுதிய திட்டத்திற்கு (**Canada Pension Plan)** நீங்கள் செலுத்தும் பணம் அதிகமாக இருக்கும்.
3. உங்களுக்கு வருமான வரி இல்லாமல் வேலை இடத்தில் கிடைக்கும் சலுகைகள் (**Non - Taxable Benefits**) இல்லாமல் போகும். குறிப்பாக சுகாதாரக் காப்புறுதி (**Medical Insurance**)
4. நீங்கள் வேலையில் இருந்து ஓய்வு பெறும் போது கிடைக்கக் கூடிய ஓய்வூதியப் பணம் (**Company Pension Plan**) கிடைக்காமல் இருக்கும்.
5. இப்படியான ஓர் இடத்தில் நான் வேலை செய்கின்றேன் என்ற சமூக அந்தஸ்து இல்லாமல் போகலாம்.
6. உங்களுக்கு வங்கிகளில் கணக்குகள் ஆரம்பிப்பது. வங்கிக்கடன் எடுப்பது கஸ்டமாக இருக்கும்.
7. சொந்தமாக வியாபாரம் நடக்கும் போது அவற்றுக்கான வரவு செலவு சம்பந்தமான தரவுகளை முறைப்படி வைத்திருக்க வேண்டியதாக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட விடயங்களை நான் எழுதியதற்கு காரணம் உங்களை சொந்தமாக வியாபாரம் தொடங்க வேண்டாம் என்று சொல்வதற்காக அல்ல. சொந்தமாக வியாபாரம் தொடங்க முன்பாக இவற்றை நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பது தான்.

சொந்தமாக வியாபாரம் நடத்துவதனால் கிடைக்கக் கூடிய வருமான வரி சம்பந்தமான சலுகைகள் என்ன என்று இப்போது பார்ப்போம். சொந்தமாக வியாபாரம் வைத்தருப்பவர்கள் அதிகமான செலவுகளை வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும் என்று பொதுவாக நாங்கள் அனைவரும் நம்புவது தான். அதிகமான செலவுகளை அவர்கள் வருமானத்தில் இருந்து கழிக்கலாம் என்பதைவிட அவர்களுக்கு செலவுகளை கழிப்பதில் கூடிய சுதந்திரம் இருக்கின்றது என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

வியாபார வருமானத்தில் இருந்து பொதுவாக எப்படியான செலவுகளை கழிக்கலாம் என்று இப்போது பார்ப்போம்.

1. உங்கள் வியாபார வரவு செலவுகளைப் பார்ப்பதற்கு கணக்காளருக்கு (**Accountant)** செலுத்தும் பணம் மற்றும் வழக்கறிஞருக்கு (**lawyer)** செலுத்தும் பணம் என்பவற்றை கழிக்கக் கூடியதாக இருக்கும்.
2. வியாபாரம் நடத்துவதற்காக நீங்கள் அரசாங்கத்திற்கு செலுத்தும் வரிகளை கழிக்க கூடியதாக இருக்கும்.
3. நீங்கள் தளபாடம் மற்றும் இயந்திர வகைகளுக்கு (**Furniture and Equipment**) பற்றி ஒரு பகுதியை ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை கழிக்கக் கூடியதாக இருக்கும்.
4. நீங்கள் வியாபாரக் காப்புறுதிக்கு (**Business Insurance**) செலவு செய்யும் பணத்தைக் கழிக்கலாம்.
5. வியாபாரத்தை நடாத்துவதற்கு நீங்கள் கடனாகப் பெறும் பணத்திற்கு செலுத்தும் வட்டியை (**Interest**) கழிக்கக் கூடியதாக இருக்கும்.
6. வியாபாரம் சம்பந்தமாக வெளியிடம் செல்லும் போது நீங்கள் தரிப்பிடம் மற்றும் உணவு என்பவற்றுக்கு செலவிடும் பணத்தை கழிவுகள் கூடியதாக இருக்கும்.
7. நீங்கள் வியாபாரத்தை பெருப்பிப்பதற்காக மற்றவர்களுக்கு செலவு செய்யும் பகுதியில் பாதியைக் கழிக்கக் கூடியதாக இருக்கும்.
8. நீங்கள் வியாபாரத்தை நடாத்துவதற்கு வியாபார இடத்துக்குக் கொடுக்கும் வாடகை (**Rent or Lease**)
9. உங்கள் வியாபாரத்தை உங்கள் வீட்டில் வைத்து நடாத்துபவராக இருந்தால் உங்கள் வீட்டுச் செலவுகளில் ஒரு பகுதியைக் கழிக்கக் கூடியதாக இருக்கும்.
10. நீங்கள் தொழிலாளர்களை வைத்திருந்தால் அவர்களுக்கு சொந்தமாகப் பணம். அவர்களுக்கு செலவிடும் பணம், சலுகைகளிற்கான செலவுகளைக் கழிக்கலாம்.
11. போக்குவரத்துச் செலவுகள் குறிப்பாக உங்கள் வாகனங்களுக்கு நீங்கள் செலவு செய்யும் பணத்தில் ஒரு பகுதியைக் கழிக்கக் கூடியதாக இருக்கும்.

இது போன்ற மேலும் பல செலவுகளை நீங்கள் வியாபார வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும். இப்படியான அதிக சலுகைகள் இருக்கின்றன என்று வைத்து இவற்றை துர்ப்பிரயோகம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.


நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 10 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க
வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

Also Air Conditioning Service & Repair


NTE AUTO INC.
New Trade Engineering

என். ரி. இ. ஒட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

Tel: (416) 750 - 1573

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough


இவ்வாறாக துர்ப்பிரியோகம் செய்வதால் உடனடியாக கிடைக்கக்கூடிய சிறிய பணத்தினால் எதிர்காலத்தில் மிகப்பெரிய பணத்தைச் செலுத்த வேண்டி நேரிடலாம். எனவே இது பற்றிய விடயங்களில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது மிகவும் அவசியம்.

இனிமேல் உங்கள் வியாபார வரவு செலவுக் கணக்கு எப்படி முறையாகக் கையாள்வது என்று பார்ப்போம். உங்கள் வரவு செலவு சம்பந்தமான அனைத்துப் பத்திரங்களையும் தயாராக வைத்திருப்பதானால் வருட இறுதியில் உங்கள் நேரத்தை மிச்சம் பிடிப்பது மட்டுமன்றி, அரசாங்கத்தில் இருந்து (**Canada Customs & Revenue Agency**) யாராவது பரிசீலனைக்கு வந்தால் கூட நீங்கள் இப் பத்திரங்களைச் சேர்ப்பதற்கு அலைந்து திரிய வேண்டிய அவசியம் இருக்காது.

உங்கள் செலவுகளிற்கான ஒவ்வொரு துண்டுகளிலும் (**Receipt**) பிற்பகுதியில் அச் செலவிற்கான விபரத்தை எழுதி வைத்திருப்பது நல்லது. இதனால் ஏற்படப்போகும் பல குழப்பங்களைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும். இப்படியான செலவுகளுக்குரிய பத்திரங்கள் அனைத்தையும் ஒன்றகா ஒரே உறையில வைத்திருப்பதைவிட அவற்றை வெவ்வேறான செலவுகள் பெயரிட்டு தனித்தனியாக வைத்திருப்பது நல்லது. இப்படி ஒழுங்காப்க பத்திரங்களை வைத்திருப்பதற்கு பலர் பல முறைகளைக் கையாள்வார்கள். இவற்றை எப்படி அடுக்கி வைக்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. இவற்றை எவ்வாறு இலகுவாக பின்பு பார்வையிடலாம் என்பது தான் முக்கியம்.

உங்கள் வியாபாரம் சம்பந்தமான அனைத்துப் பத்திரங்களையும் தொடர்ச்சியாக ஆறு வருடங்களுக்கு தவறாமல் வைத்திருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் (**CCRA**) நிபந்தனைகளில் ஒன்று.

அடுத்த இதழில் எவ்வாறு உங்கள் சொந்த வியாபாரத்தை முறைப்படி ஆரம்பிப்பது பற்றியும். இதற்காக உங்களுக்கு அரசாங்கத்தில் இருந்தும் மற்றும் வங்கிகளில் இருந்தும் கிடைக்கக் கூடிய சலுகைகள் என்ன என்பன பற்றியுமான விளக்கத்தை எதிர்பார்க்கலாம்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை எங்களுக்கு தெரியப்படுத்தினால் அதற்கான பதில்களை தரக் கூடியதாக இருக்கும்.
மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.


**Mark Markandu, CGA**
**Certified General Accountant**
**416 290 0946 / 416 834 6660**



# அன்புத் தமிழ்

- கவிஞர் வி. கந்தவனம்

## பண்புடைமை

பண்பாவது உயர்ந்த குடிப்பிறந்த குண இயல்பு. குடிக்கு உயர்வு குணத்தின் உயர்வாகும். தமிழர் கண்ட உயர்ந்த குணங்கள் பல. அவற்றைப் பொதுக் குணங்கள் சிறப்புக் குணங்கள் என இருவகைப் படுத்தலாம். செப்பம், நாணம், ஒழுக்கம், வாய்மை, நகை, இன்சொல், பொறுமை, இகழாமை முதலியன பொதுக் குணங்கள். ஈகை மானம், வீரம், கடமை, ஒற்றுமை போன்றவை சிறப்புக் குணங்கள்.

